
குருகுல வெளியீடு: 3

உ

சிவமயம்



சிவராத்திரி மாச நிர்ணயம்

எழுதியவர்கள் :

அச்சுவேலி

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள்

கண்டனூர்

சிவஸ்ரீ அரு. இராமநாதக் குருக்கள்

திருவாவடுதுறை

சிவஸ்ரீ. க. சுவாமிநாத சிவாசாரியார்

சிவானந்த குருகுலம்

திருக்கேதீச்சரம்

சோபகிருது ௵ கார்த்திகை ௧௭

சிவராத்திரி மாச நிர்ணயம்

எழுதியவர்கள் :

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள்

சிவஸ்ரீ. அரு. இராமநாதக் குருக்கள்

சிவஸ்ரீ. க. சுவாமிநாத சிவாசாரியார்

சிவானந்த குருகுலம்

திருக்கேதீச்சரம்

குருகுல வெளியீடு: 3

4-12-63

கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம். 1215—63

முகவுரை

சோபகிருது வருடத்தில் வரும் சைவ விரதங்களைக் குறிக்கும் நாள்கள் பஞ்சாங்கங்களில் ஒன்றுக்கொன்று மாறுபாடாயிருப்பதைக் கண்டு, அவற்றைப்பற்றிய திருத்தமான கருத்தைச் சைவ உலகுக்கு அறிவுறுத்த விரும்பி, சைவாகம சாத்திரங்களைக் கற்றுத்துறை போகிய சைவப்பேரறிஞர்களாகிய அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், தருமபுரம் சிவஸ்ரீ S. சுவாமி நாத சிவாசாரியார், கண்டனூர் சிவஸ்ரீ அரு. இராம நாதக் குருக்கள், திருவாவடுதுறை சிவஸ்ரீ க. சுவாமி நாத சிவாசாரியார் ஆகியோர்களது தீர்க்கமான முடிபைத் திரட்டிச் சிவானந்த குருகுல வெளியீடு — 2 என நாம் இற்றைக்குச் சில மாதங்களுக்கு முன் வெளியிட்டோம். அவ் வெளியீட்டில்,

நவராத்திரி	ஆரம்பம்	— ஐப்பசி	1-ம்	திகதி	18-10-63
கந்தசஷ்டி	,,	— கார்த்திகை	1-ம்	,,	17-11-53
மகா சிவராத்திரி	,,	— மாசி	29-ம்	,,	12-3-64

எனக் குறிக்கப்பட்டிருப்பது காணத்தக்கது.

சிவானந்த குருகுல இரண்டாவது வெளியீடு வெளி வந்ததும் நமது குருகுலத்தின் இச்சேவையைப் பாராட்டி இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள சைவப் பெரியார்களும் சைவப் பேரறிஞர்களுமாகிய பலருடைய கடிதங்கள் நமக்கு வந்து சேர்ந்தன. அவை மட்டுமன்றி, நமது இரண்டாவது வெளியீட்டில் காட்டப் பட்ட முடிபுகளுக்குரிய ஆகம சாத்திரப் பிரமாணங்களைப் பிரசுரித்துச் சைவ உலகுக்குத் தெரியப்படுத்துமாறு ஆர்வத்துடன் வேண்டிய கடிதங்கள் சிலவும் நமக்குக் கிடைத்தன.

சிவராத்திரி விரதம் அகில உலகச் சைவப் பெருமக்கள் சிரத்தையோடு கைக்கொள்ளப்படுவது மட்டுமன்றி, நமது திருக்கேதீச்சரத்தில் அகில இலங்கைச் சைவ நன்மக்களனைவரும் சேர்ந்து பக்திசிரத்தையோடு கொண்டாடப்படும் சீரிய விரதமுமாதலால், இச்சிவராத்திரி விரதநாள் எது என்பதை ஆகமப் பிரமாணங்களுடன் எடுத்துக்காட்டி, சிவானந்த குருகுலத்தின் இரண்டாவது வெளியீட்டினைத் தொடர்ந்து மூன்ருவது வெளியீட்டினைச் சைவ உலகுக்கு அளிக்கத் தீர்மானித்தோம். இம்மூன்ருவது வெளியீட்டில், அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், சிவாகம வித்துவான் கண்டனூர் சிவஸ்ரீ அரு. இராமநாதக் குருக்கள் ஆகியோரின் விரிவான கருத்துக்கள் உள்ளன.

இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள சைவப் பெருமக்கள் இங்குக் காட்டப்பட்டுள்ள அதிசிறந்த ஆகமப் பிரமாணங்களைக் கருத்துட்கொண்டு, இவ்வருடச் சிவராத்திரி விரதத்தை மாசி மாதம் 29-ம் திகதி (12-3-64) கைக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்ரேம்.

க. வைத்தியநாதன்

திருக்கேதீச்சரம் — முகாமைக்காரர்,

சோபகிருது ஹு கார்த்திகை கஎ — சிவானந்த குருகுலம்.

உ

கணபதி துணை

சிவராத்திரி மாச நிர்ணயம்

(1) மாசமானது சாவனம், சாந்திரம், நக்ஷத்திரம், சௌரமென நான்கு வகைப்படும். எந்தெந்த விரதத்துக்கு எந்தெந்த மாசம் விதிக்கப்பட்டதோ, அந்தந்த விரதத்தை அந்தந்த மாசத்திற் செய்தல் வேண்டும் என்று சிந்தியம் என்னும் ஆகமம் கூறும்.

இந்தப் பிரமாணத்தால் எந்தக் கர்மாவுக்கு எந்த மானஞ் சொல்லப்பட்டதோ, எது அனுஷ்டானத்திலிருந்து வந்ததோ அந்தவிதமே நடத்தவேண்டும் என்பது பெறப்படுகின்றது.

(2) "ஸ்தாபனம் புரோக்ஷணம் தீக்ஷா
சிவராத்ரி சிவோத்ஸவ: !
சௌரமாஸே துகர்த்தவ்ய:
சாந்திரமானேப்ரசஸ்தக: !!

[ஸ்தாபனம், சம்புரோக்ஷணம், தீக்ஷை, சிவராத்திரி, சிவோத்சவம் என்பவை சௌரமாசத்திற் செய்யத்தக்கன; சாந்திரமானம் தள்ளத்தக்கது] என வீராகமமும், சித்தாந்த சேகரமும் விதிக்கின்றன.

"ஸ்தாபனம், ப்ரோக்ஷணம், தீக்ஷை, சிவராத்திரி, சிவோத்சவம் என்பவை சௌரமாசத்திற் செய்யத்தக்கன; பவித்திரோற்சவத்தைச் சாந்திரமாசத்திற் செய்க" என்று சிந்திய விசுவசாதாக்கியம் விதிக்கின்றது. "சிவராத்திரியைச் சௌரமாசத்தில் அனுட்டிக்க வேண்டும்; சாந்திரமாசத்திற் செய்யக்கூடாது" என்று உத்தர காரணாகமம் கூறுகின்றது. "மாசபூஜை முதலியவைகளைச் சௌரமாசத்திற் செய்க; கும்பமாசத்துக்

கிருஷ்ணசதுர்த்தசியில் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க'' என்று பிமசங்கிதை பகருகின்றது.

''துலாஸ்நாந முஷாப்யங்கம் கிருத்திகா தீபமேவச
தநுர்மாஸிஹரே: பூஜா சிவராத்ரி வ்ரதந்ததா!
சௌரமானேன கர்த்தவ்யம் சாந்த்ரமானேநகாரயேத்''

[துலாஸ்நானம், உஷத்கால அப்பியங்கம், (நரகசதுர்த்தசி ஸ்நானம்) கார்த்திகை விளக்கீடு, மார்கழி மாச உஷத்கால பூஜை, சிவராத்திரி விரதம் என்பவை சௌர மாசத்திற் செய்யத்தக்கன; சாந்திர மாசத்திற் செய்யற்க''] என்று தர்மசாத்திரச் சுருக்கம் கூறுகின்றது.

''துவிஜாதீநாம்சாந்திரமானேவ்ருதாந்யபிபலந்திஹி
உபாகர்மஞ்சபித்ரியஞ்சசிவராத்திரிவ்ரதம்விநா!!''

[பிராமணர் முதலியோருக்குச் சாந்திரமானத்திலே விரதங்கள் பலிக்கின்றன; உபாகர்மம், பிதிர்கர்மம், சிவராத்திரி விரதம் தவிர] என்று சைவபுராணம் செப்புகின்றது.

இவை முதலிய சிவாகம ஸ்மிருதி புராண வாக்கியங்களினுலே மகோத்சவம் சிவராத்திரி முதலியன சௌரமாசத்திற் செய்யப்படும் கர்மாக்கள், என்பது உணர்ந்துகொள்ளத்தக்கதாகின்றது.

(3) ''சூரியன் மேஷம் முதலிய இராசிகளிற் செல்லும் மாசம் சௌரமாசமென்று சொல்லப்படும். சௌர மாசத்தில் மாசநக்ஷத்திரம் பிரதானமென்று கூறப்படுகின்றது. மேட மாசத்தில் சித்திரை நக்ஷத்திரம் விசேஷமாகக் கொள்ளப்படுதலால் அந்த மாசம் சைத்திரமென்று சொல்லப்படுகின்றது. இடபமாதத்தில் விசாக நக்ஷத்திரம் பிரதானமாகக் கொள்ளப்படுதலால், அந்த மாசம் வைசாகமென்று கூறப்படுகிறது. விருச்சிக மாசத்தில் கார்த்திகை நக்ஷத்திரம் விசேஷமாகையால்

அந்த மாசம் கார்த்திகை மாசமென்று சொல்லப்படுகிறது. கும்பமாசத்தில் மாக நக்ஷத்திரம் விசேஷமாகக் கொள்ளப்படுதலால் அது மாகமாசமென்று சொல்லப்படுகிறது'' எனக் காரணுகமம் கூறும். மற்றைய மாசங்களுக்கும் இவ்வாறே அவ்வாகமத்திற் சொல்லப்பட்டது. "எப்பொழுது சூரியன் கும்பராசியிற் செல்கின்ருனே அந்த மாசம் மாகமாசமென்று நினைக்கத்தக்கது.'' எனப்புரோத்கீதாகமம் பகருகின்றது.

இவை முதலிய பிரமாணங்களினுலே ஆகமங்களில் வருகிற சைத்திரமுதலிய மாசப்பெயர்களை' சௌரமாசத்திற்காவது சாத்திரமாசத்திற்காவது தகுதி பற்றிக் கொள்ளவேண்டுமேயன்றிச் சாந்திரமாசந்தானென்று ஒருபக்ஷத்திற்கே ஸ்திரமாகக்கொள்ள முடியாதென்பதும் சௌரமாசத்திற்கும் சைத்திராதி சப்தங்கள் உதகலிக்கப்பட்டிருக்கின்றன என்பதும் புலனுகின்றன.

(4) "சூரியன் கும்பராசியில் எப்பொழுது செல்கின்ருனே, அதுதானே மாகமாசமாகும்; அம்மாசத்தில் வரும் கிருஷ்ணசதுர்த்தசி மகாநிசி என்று சொல்லப்படும் அதில் சிவனைப்பூசிக்க'' என்று சூக்ஷ்மாகமம் கூறுகின்றது. "ஸௌரபக்ஷேமாகமாசி கிர்ஷ்ணபச்ஷேவிசேஷத:! சதுர்த்தக்யாம் ஜாகருக: சிவராத்ரிவிரதம் சரோத்!!'' சௌரபக்ஷமாக மாகமாசத்தில் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் உறக்கமின்றி சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கவேண்டும்'' என்று பிம்பம் என்னும் ஆகமம் கூறுகின்றது. "கும்பமாசத்து கிருஷ்ணசதுர்த்தசியில் சிவபெருமானைப் பூசித்துச் சிவராத்திரிவிரதம் அனுட்டிக்கவேண்டும்'' என்று கிரணுகமம் செப்புகின்றது. கும்பமாசத்தில் கிருஷ்ணபக்ஷத்தில் வருகிற அஸ்தமனபரியந்தம் வியாப்தியுடன் கூடிய திரயோதசியும் அதற்குமேல் சதுர்த்தசியு மிருந்தால் அந்த இரவு சங்கரனுக்குப் பிரியமானதாகும்'' என்று

விராகமம் விளம்புகின்றது. "சூரியன் கும்பராசியை அடைந்த காலமே மாகமென்றபெயரை அடைகின்றது. அந்த மாகமாத கிருஷ்ணசதுர்த்தசி மகாநிசியில் சிவராத்திரிபூஜை செய்யவேண்டுமென்று வேருேராகமத்தில் விதிக்கப்பட்டது. லளிதம்" முதலியவற்றிலும் இவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது. சூரியன் கும்பராசியிற் செல்கின்ற மாசிமாதத்தில் வரும் கிருஷ்ணசதுர்த்தசி சிவராத்திரியாகும்; அது கோடிபாவங்களை நாசஞ்செய்யும்" எனப்பராசரம் பகருகின்றது. "இராத்திரி முழுவதும் தைமாதத்தையடைந்த சிவராத்திரியானது பாவத்தைக் கொடுக்கக் கூடியது; விதிக்கப்பட்ட காலத்தைச் சேராததால் தள்ளத்தக்கது. கேவலம் தைமாதத்தையடைந்த சதுர்த்தசிதிதியானது விதிக்கப்படாமலிருப்பதினுலே, சந்திரகிரஹணத்தைத்தவிர வேருன இராத்திரியில் பிதிர்தர்ப்பணம் எப்படியோ அப்படிப் பாபத்தைக் கொடுக்கிறதாய்த் தள்ளத்தக்கது" என வித்தியாவார்த்திகம் கூறுகின்றது.

5. "கும்பேரவௌது சம்ப்ராப்தேகிரஷ்ணபக்ஷ விஷேத: | த்ரயோதஸ்யா சதுர்த்த சியாசம்யுக்தே தந்நிசிஸ்ததா | சிவராத்ரிவ்ரதம் குர்யாத பரேஹநிபாரணம் கர்விதச் சாந்திர பக்ஷது சிவராத்ரிவிரதம் சரேத் | தத்ராத்ரீ பூபதீ நாஞ்ச ஜ நாநா மபி ஸர்வ ச: | சிவராத்ரிவ் ரதீ நாஞ்ச ரௌவம் நரகம் ப வேத் தத் தோஷசம நார்த் தாய சாந் திராயணவ் ரதம் சரேத் | புனச்சாஸ்த் ரோக்தவத் குர் யாத்சௌர மாஸேவ்ர தம் சரேத் |"

[சூரியன் கும்பராசியில் இருக்கும் பொழுது கிருஷ்ண பக்ஷத்தில் திரயோதசி சதுர்த்தசிகளோடு கூடின அந்த நிசியில் சிவராத்திரி விரத மனுட்டித்து மறுதினம் பாரணை செய்க. சாந்திரபக்ஷத்தில் சிவராத்திரி விர

தத்தை அனுட்டித்தால் அந்தத் தேசத்து ஜனங்களுக்கும், ராஜாக்களுக்கும் சிவராத்திரி விரதமனுட்டிப்பவர்களுக்கும் ரௌரவ நரகமுண்டாம். அந்தத் தோஷ நிவிர்த்திக்காகச் சாந்திராயண விரத மனுட்டிக்கவேண்டும். பின்பு சாஸ்தி ரோக்தமாகச் சௌர மாசத்திலே விரதத்தை அனுட்டிக்க வேண்டும்] என்று சிந்தியாகமம் கூறும்.

அவ்வாறே சித்தாந்த சேகரத்திலும், "சிவராத்திரி விரதத்தைச் சௌரபக்ஷமாகக் கொள்ளுதல் வேண்டும்; சாந்திரபக்ஷம் நிந்திக்கத் தக்கது; நிந்திக்கப்பட்ட சாந்திரபக்ஷமாகச் சிவராத்திரி விரதமனுட்டித்தவர்கள் ரௌரவ நரகமடைவர்; அந்தத் தோஷசாந்தியின் பொருட்டு, சாந்திராயண விரதமனுட்டிக்க வேண்டும். பின்பு சாஸ்திர விதிப்படி சௌரமாசத்தில் விரதமனுட்டிக்கவேண்டும். ஆகையால் அந்தந்த விரதங்களுக்குச் சொல்லப்பட்ட மாசங்களில் அவ் வவ் விரதங்களைக் கொள்ளுதல் வேண்டும்" என்று சொல்லப்பட்டது.

இத் தியாதி பிரமாணங்களினுலே சிவராத்திரி விரதம் பூசை உற்சவங்கள் சௌர மாசத்திலேயே செய்தல் வேண்டு மென்பதும், சாந்திரபக்ஷமாகச் செய்தல் கூடாதென்பதும், சாந்திரபக்ஷமாக அனுட்டித்தால், பின்பு சாஸ்திர விதிப்படி சௌரமாசத்திலே அவ்விரதத்தை அனுட்டித்தல் வேண்டும் என்பதும் நிச்சயமாகின்றன.

(6) சென்ற பராபவ வருஷத்தில் காஞ்சீபுரத்திலே சில சிவாசார்யர்கள் மகாசிவராத்திரியைச் சாந்திரமானப்படி அனுட்டித்தனர். இது விஷயமாகப் பரிபூரணமான திருவாவடுதுறை ஆதீனத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் சாஸ்திர மறிந்த வித்துவான்களையும் பல ஆகமவிற்பன்னர்களையும் அழைத்துப் பரிசீலனை செய்து சௌரமானப்படி மாசி

மாதம் 29 ந் திகதிதான் நடத்தவேண்டு மென்று நிர்ணயிக்கப்பட்டது. தேசிகர் முன்னிலேயில் சாந்திரபக்ஷத்தை ஆதரித்தவர்கள் தமது பிழையை ஒப்புக்கொண்டனர். தாது வரு, புரட்டாதி மீ, 2 உ எழுதிய கடிதத்தில் இதனை எனக்குத் தெரிவித்தவர்கள் சைவாகமாதி சாஸ்திர மகா பண்டிதரும் ஆச்சாள்புரம் ஆகமபாடசாலே உபாத்தியாயராயிருந்தவரும் ஆகிய மாயூரம் சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் அவர்களாவர்.

(7) இவ் வருஷத்தில் நடத்தவேண்டிய நவராத்திரி, கந்தசஷ்டி, சிவராத்திரி என்னும் விரதநிர்ணயம் பற்றி, பல ஆகம வித்வான்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து மகாசிவராத்திரி மகோற்சவம் முதலியவை சௌரமானத்தாலும், விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி என்னும் விரதங்கள் சாந்திரமானத்தாலும் அனுஷ்டிக்கவேண்டு மென்று நிச்சயம் செய்யப்பெற்று, தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்த வாக்கிய சைவப் பஞ்சாங்கத்தில், சோபகிருது ௵, மாசி மாதம் 29 ந் திகதி சிவராத்திரிவிரத உத்சவங்கள் அனுட்டிக்க வேண்டுமென்று குறிக்கப்பட்டுள்ளது.

இக் காரணங்களால் ஆகமவிதிக்கும் ஆன்றோர் வழக்குக்கும் மாறுபாடில்லாமல் மகா சிவராத்திரி சோபகிருது வருஷம் மாசி மாதம் 29-ந் திகதி (12. 3. 64) அனுட்டிக்கப் பெறுதல் வேண்டு மென்று நிச்சயமாகின்றது. ஆஸ்திகர்கள் அனைவரும் சிவாகமங்களிற் கூறியபடி இவ்வாறே அனுஷ்டித்து இம்மை மறுமைப் பயன்களைப் பெறுவார்களாக.

ச. குமாரசுவாமிக் குருக்கள்
அதிபர், சிவானந்த குருகுலம்
வேதசிவாகம பாடசாலே
திருக்கேதீச்சரம்

சோபகிருது ஐப்பசி 16 உ

உ

சிவமயம்

நவராத்ர சிவராத்திரீ பஞ்சாங்கமாற்றம்

சிவாகமவித்வான்

கண்டனூர் :

சிவஸ்ரீ அரு. இராமநாதக்குருக்கள்

எழுதியது

சோபகிருது வருஷம்புரட்டாதி மீ 25ந் திகதி வெளிவந்த இந்துசாதனத்தில், "நேயர்கள் நெஞ்சம்" "திருக்கணித பஞ்சாங்கத்தின் நவராத்திரி—சிவராத்திரி விளக்கம்" என்ற தலைப்பில், காரைநகர் திரு. சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள், பிரமஸ்ரீ கா. சி. மகேச சர்மா அவர்களின் உதவியுங்கொண்டு எழுதிய கட்டுரை பார்த்தேன்.

திருக்கேதீச்சரம், சிவானந்த குருகுலத்து இரண்டாவது வெளியீட்டில் நான் எழுதிய நவராத்திரி சிவராத்திரி என்ற கட்டுரையில், "இப்பஞ்சாங்கக் குழப்பத்தில் நாம் அழுந்திக் காலத்தைப் போக்க வேண்டாம்" என்றும், "பஞ்சாங்கப்போராட்டம்" என்றும் எழுதியிருந்தேன். இதைப்படித்த விஷயகிராகிகளாகிய அன்பர்களுக்கு நான் எந்தப் பஞ்சாங்கச் சார்பிலும் இல்லாதவன் என்பது புலனாகாமலிராது.

வெளியீட்டில் திகதி இல்லையென்பது ஒரு குற்றம். திகதியில்லாததினால் அது செல்லுபடியாகாது. ஆயினும் தள்ளுபடியாகாமல் ஏற்றுக்கொண்டமைக்கு நன்றி.

திருக்கணித பஞ்சாங்கமே சரி. வாக்கிய பஞ்சாங்கம் சரியில்லை என்பது அவர்கொள்கை. இரண்டு விதமாகவே அபிப்பிராயமிருக்கிறதென்பது பின்வரும் விஷயங்களால் தெரிந்து கொள்ளலாம். திரு. கொண்டைஐயங்கார் அவர்களுக்கு வாக்கியபஞ்சாங்கங் கணிக்கும்படி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் வரங்கொடுத்தமையை நான் எழுதியது கண்டு, "திருக்கணிதபஞ்சாங்கத்தை வெளியிட அனுக்கிரகித்த சுவாமிகள் வாக்கிய பஞ்சாங்கத்தையும் சரியென்று வெளியிட அனுக்கிரகித்ததாகக் கூறுவது எதுவரையும் உண்மையோ தெரியவில்லை" என்கிருர்கள். இந்த விஷயத்தை ஸ்ரீ சுவாமிகள் சமூகத்துக்கே எழுதித் தெரிந்து கொள்ளலாமே. சுவாமிகள் தாம் அனுக்கிரகிக்கவில்லை என்ருல் பஞ்சாங்கங் கையில் இல்லாததால் நாமுமதை வாபஸ் வாங்கிக் கொள்வோம்.

ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகளும்......"கந்தஷஷ்டிகார்த்திகையிலும் கொள்ளப்படவேண்டுமென அபிப்பிராயப் படுவதாக வீரகேசரிப் பத்திரிகை மூலம் தெரிய வருகிறது" என்றும் எழுதுகிருர்கள் சுவாமிகள். மடத்துத் திருக்கணித பஞ்சாங்கத்தில் புரட்டாதி மீ நவராத்திரியும், ஐப்பசி மீ கிருத்திகாசுத்தப்பிரதமை தொடங்கி சஷ்டியில் கந்த சஷ்டியுமே குறிக்கப்பட்டிருக்கிறது. கார்த்திகையில் கந்தசஷ்டி எழுதப்படவில்லை என்பதை உணர்வார்களாக.

குருகுல வெளியீட்டில் எழுதிய அர்ச்சகர்கள் மேலைத்தேசத்தையோ அவர்கள் மிலேச்சரென்ரோ அவைதிகமென்ரோ நினைக்கவும் எழுதவுமில்லை. அந்த நினைப்பு தேசிகர் மனத்தில்உதித்தால் அந்த நிந்தா வாக்கியத்திற்கு அவரேபொறுப்பாளர்.

மேலும் தேசிகரவர்கள் எங்கள் முன்னேர்கள் திருக்கணிதப்படிதான் அனுட்டித்து வந்தார்கள் என்

கிறார்கள். அப்படியே எல்லோரும் உளரோ என்பதுதான் சந்தேகம். இந்தியாவிலுள்ள சைவமடாதீனங்களும் சமஸ்தானங்களும் திருக்கணிதத்தை இன்னும் ஆதரிக்கவில்லை. ஸ்ரீ ஜகத் குருமடங்களோ இரண்டு விதமாகவிருக்கின்றன. இது விஷயமாக இந்தியாவில் வெளியான மூன்று விஷயங்களை அனுவதிக்கின்றேன்.

400 சோதிடநிபுணர்கள் கருத்து

தர்பங்கா (மேல்வங்கம்) ஆக. 31

"துர்க்காபூஜையை (நவராத்திரி) அக்டோபர் 18 ந் திகதியிலிருந்துதான் கொண்டாடவேண்டும் என்றும், செப்டம்பரில் கொண்டாடக் கூடாது என்றும் மிதிலை, வங்கம், மகாராஷ்டிரம், ஒரிஷ்ஷா, உத்தரப்பிரதேசம் ஆகியவற்றைச் சேர்ந்த 400 சோதிடர்களின் மகாநாடு முடிவு செய்திருக்கிறது. இந்த இருதின மகாநாட்டிற்கு தர்பங்கா சந்திரதாரி மிதிலைக் கல்லூரி ஸ்தாபகர் தாகூர் சந்திரதாரிசிங் தலைமை வகித்தார். செப்டம்பரில் மலமாதம் இருப்பதால் துர்க்கா பூஜை என்ற சுபகாரியத்தை செப்டம்பரில் செய்வது சிலாக்கியமல்ல என்று மகாநாட்டினர் கருதினர். தர்பங்கா சம்ஸ்கிருத கலாசாலை உபஅத்யக்ஷகர் மகாமகோபாத்யாய உமேஷ்மிஸ்ரா விவாதங்களைத் துவக்கி வைத்தார். விவாதங்களில் ஏற்பட்ட முடிவை தர்பங்கா ஸ்ரீ ஜீவேஸ்வரசிங் அறிவித்தார். மிதிலையில் அக்டோபரில் தான் துர்க்காபூசை நடத்தப்படும் என்றார்.

சிலகாலத்துக்குமுன் காசியில் நடைபெற்ற பண்டிதர்களின் மகாநாடும் இப்படித்தான் முடிவுசெய்தது."
(தினமணி 2-9-63)

நவராத்திரி தீபாவளி எப்பொழுது சிருங்கேரி ஜகத்குரு ஆக்ஞை

சிருங்கேரி ஸ்ரீ சுவாமிகளின் அந்தரங்கக் காரிய தரிசி கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார். அனேகம் சிஷ்யர்கள் நாளது வருஷம் ஏற்பட்டிருக்கும் சில பஞ்சாங்கத்தார்களின் விதவிதமான கணிதங்களால் நவராத்திரி எப்பொழுது நடத்தவேண்டுமெனவும் தீபாவளி எப்பொழுது நடத்தவேண்டுமெனவும் சந்தேகம் கேட்கிருர்கள். இது விஷயங்களை மகாசந்நிதானத்தில் தெரியப்படுத்தியதில் சூரிய சித்தாந்தத்தை அனுசரிக்கும் நாம் அனைவரும் நவராத்திரி மகோற்சவத்தை **18-10-63** முதல் துவக்கியும், தீபாவளியை **18-11-63** திகதியும் கொண்டாட வேண்டுமெனவும், நமது ஸ்ரீ மடத்திலும் அந்தநாட்களிலேயே ஷ விசேஷங்கள் நடக்குமெனவும் தெரிவிக்கிருர்கள். **(தினமணி 13-9-63)**

தீபாவளி நவராத்திரி பண்டிகைகள் காஞ்சி சுவாமிகள் ஸ்ரீமுகம்

காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஆஞ்ஞைப்படி மடத்திலிருந்து விடுக்கப்பட்ட ஸ்ரீமுகமாவது, 1877 வருஷம் கும்பகோணம் மடத்தில் .... சதஸ்கூட்டி .... பஞ்சாங்க விஷயமான விசேஷசர்ச்சை நடந்தது .... மேற்படி சதஸ்ஸில் உபராகாதிகளுக்கு பூப்ருஷ்ட திருக்சித்தமும் தித்யாதிகளுக்கு பமத்யத்திலிருக்கிற பூமத்ய திருக்

சித்தமுமே கிராஹ்யமானது எனநிர்ணயிக்கப்பட்டு அதன்படியே ஸ்ரீ பீடத்திலெழுந்தருளியிருந்த பரமேஷ்டி குரு ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதிஸ்வாமிகள் ஸ்ரீ முகம் அனுக்கிரகித்திருக்கிருர்கள். நமது ஆசாரிய சுவாமிகளும் அதை அனுசரித்து.........அனுஷ்டானத்துக்கு வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அந்தக் கிரமப்படியே கார்த்திகம் அதிகமாசமாகிறது. புரட்டாதி மாதத்தில் வரும் ஆசுவிஜமாசத்துக்கு அதிக மாசதோஷமில்லை.........தீபாவளி பண்டிகையும் அனுஷ்டிக்கப்படுகிறது. (தினமணி 7-9-63) இவ்வாறு தினமணியில் வெளிவந்த செய்திகளைக் கண்டுகொள்க.

திருச்சியில் புரட்டாதியிலே நவராத்திரி அனுட்டிக்கப் படுவதாகப் பத்திரிகைகளில் வெளிவந்தது. காஞ்சி ஸ்ரீசுவாமிகள் அவர்களும் அப்பிரதேசத்தில் விஜயஞ் செய்திருந்தார்கள். ஆனல் திருச்சியிலும், சுவாமிகளுக்கு மிகவும் ஆதிக்கமுள்ள திருவானைக்கோயிலிலுங் கூட நவராத்திரி ஐப்பசியிலேயே நடந்தது. இந்தியாவிலுள்ள சைவமடங்களிலும் திருக்கோயில்களிலுமெல்லாம் ஐப்பசியிலேயே நடந்தேறின. புரட்டாதியில் இரண்டொருகோயில்களில் நடைபெற்றன. ஐப்பசியில் நடந்த கோயில்கள் எண்ணவும் எழுதவும் முடியாதனவாம்.

திருக்கணித பஞ்சாங்கங்களாவது எல்லாம் ஒன்று போலிருக்கின்றனவா ? மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கத்திலும் மற்றைத்திருக்கணித பஞ்சாங்கங்களிலும் ஐப்பசி அதிகமாசமாகவுள்ளது. காஞ்சிகாமகோடி ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் மடத்துப் பஞ்சாங்கத்தில் கார்த்திகை அதிகமாசம். திருக்கணித பஞ்சாங்கங்களில் நவராத்திரி புரட்டாதி மாசத்திலும் கந்ததசஷ்டி கார்த்திகையிலுமுள்ளன. காஞ்சி......

பஞ்சாங்கத்தில் நவராத்திரி புரட்டாசியில்; கந்தசஷ்டி ஐப்பசியில். சுதேசமித்திரன் பஞ்சாங்கத்தில் புரட்டாதியில் நவராத்திரி. ஐப்பசியிலும் நவராத்திரி அதன் மத்தியில் ஆருவதுநாள் மகாசஷ்டி; சூரசம்ஹாரம்; கார்த்திகை மீ 6-ந்திகதி சுப்பிரமணியசஷ்டி என்றிருக்கிறது. காஞ்சிமடம் பஞ்சாங்கத்தில் சம்பாசட்டி என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

தாரணவருஷத்தில் தையிலும் மாசியிலும் ஸ்மிருதிப்படி ஆகமப்படி சிவராத்திரி என்று தாங்கி வந்த கஞ்சனூர்ப்பஞ்சாங்கத்தில், நிகழும் வருஷத்தில் தைமீ மகாசிவராத்திரி என்று குறிக்கப்பட்டிருக்கிறது. திருமாலிருஞ்சோலை அழகர்கோயில் பஞ்சாங்கத்தில் தையில் ஸ்மிருதிப்படி மாசியில் ஆகமப்படி சிவராத்திரி. கொண்டை ஐயங்கார் பஞ்சாங்கமும் அப்படியே. இராமநாதபுரம் சமஸ்தானம் பஞ்சாங்கத்தில் சிவராத்திரி மாசியில். இதுதான் பஞ்சாங்கக் குழப்பம் என்பது. இதுபோராட்டந்தானே. இவ்விஷயங்களை நேயர்கள் நெஞ்சம் நன்கு அறிக. விடைபெறுகின்றேன்.

உ

சிவமயம்

திருவாவடுதுறை சிவாகமவித்வான்

சிவஸ்ரீ க. சுவாமிநாதசிவாசாரியர்

எழுதியது

நவராத்திரி—சரஸ்வதிபூஜைக்கு ராஷ்ட்ரிய பஞ்சாங்கப்படி செப்டம்பர் மாதம் 28-ந்திகதி போட்டிருந்த லீவு அக்டோபர்மாதம் 26-ந்திகதி மாற்றப்பட்டிருப்பட்டிருப்பதாக எழுதியுள்ளதை வெளியூர் செப்டம்பர் 25-ந்திகதி மித்திரனில் பார்க்கவேண்டும். நிற்க

மஹாசிவராத்திரிவிரதம் சௌரமாசத்தில் தான் அனுட்டிக்கவேண்டும் என்பது சிவாகமசம்மதம். துலாஸ் நாநமுஷாப்யங்கம் கிருத்திகாதீபமேவச! தநுர்மாஸி ஹரேபூஜா சிவராத்திரி விரதந்ததா சௌரமாநேது கர்த்தவயம் சாந்ரமாநே நகாரயேத்!

துலாஸ்நாநம், உஷாப்யங்கம், கார்த்திகை விளக்கீடு மார்கழிமாசபூஜை, சிவராத்திரி விரதம் என்பவற்றைச் சௌரமானத்திற் செய்யவேண்டும். சாந்திரமானத்தில் செய்தல் கூடாது என்று தருமசாஸ்திர சுருக்கத்தில் சொல்லியிருக்கிறது. சாஸ்திரங்கள் கூறிய விதிகளின் படி இந்த வருஷத்தில் மாசி மாதம் 29-ந் திகதி மகாசிவராத்திரி அனுஷ்டிப்பதே தக்கது.

அனுபந்தம்

சோபகிருதுவருஷம் புரட்டாதி மீ 25-ந்திகதி வெளி வந்த இந்துசாதனத்தில் திருக் கணித பஞ்சாங்கத் தின் நவராத்திரி-சிவராத்திரி விளக்கம் என்னும் முக நாமத்துடன் ஸ்ரீ. சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் எழுதிய கட்டுரையில் சிவராத்திரியைப்பற்றி எழுதிய தைச் சைவப்பெருமக்கள் பார்வைக்கு இங்கு அனுபந் தமாகத் தருகின்றோம்.

"இனிச் சிவராத்திரியை ஆராய்ந்தால் வாக்கிய கணிதர்களும் திருக்கணிதர்களும் அதனைத் தைமாதத் தில் நிர்ணயித்தமை பொருந்தாது என்பது வெளியா கும். சென்ற பராபவ வருஷத்தில் (1906—07) தை மாசத்தில் சில பஞ்சாங்கங்களில் சிவராத்திரி குறிப் பிட்டதாகவும், அதுசரியில்லை எனவும் ஸ்ரீலஸ்ரீ விருதை சிவஞானயோகிகள் சித்தாந்தமாக மகாசிவராத்திரி நிர்ணயம் என ஒருதுண்டுப் பிரசுரம் வெளியிடப்பட் டது. அதில் காரணம், காமிகம் சிந்தியம், சிந்தியவிசுவ சாதாக்கியம், புரோத்கீதம், சந்தானம், மகுடம் என்னும் சைவாகமங்களிலிருந்து அநேகம் சுலோகங் கள் எடுத்துக்காட்டப்பட்டு கும்பமாதத்தில் கிருஷ்ண சதுர்த்தசியில் சிவராத்திரி கொள்ள வேண்டுமென நிர் ணயிக்கப்பட்டுள்ளது. அது போலவே இவ்வருடத்தி லும் கும்பமாதத்திலேயே கிருஷ்ணசதுர்த்தசியில் சிவ ராத்திரி கொள்ள வேண்டுமெனச் சிவானந்தகுருகுல வெளியீட்டில் நிர்ணயித்திருப்பது போற்றத்தக்கதா கும்."

குருகுல வெளியீடு : 3-தொடர்ச்சி

உ
சிவமயம்

சோபகிருது வருஷ மகாசிவராத்திரி
மாசி மாதம் 29-ம் திகதியே

எழுதியவர் :
கண்டனூர் சிவாகம வித்வான்
சிவஸ்ரீ அரு. இராமநாதக் குருக்கள் அவர்கள்

கொக்குவில் பிரமஸ்ரீ இ. சி. இரகுநாதையர் அவர்களால் எழுதப்பெற்ற "சோபகிருது வருட சிவராத்திரி நிர்ணயம்" கிடைக்கப்பெற்றேன் அவ்வெளியீட்டின் 6-வது பக்கத்தின் முதற் பந்தியில் "சாந்திர மாதமென்ற மாதமே எங்கள் அகராதியில் இல்லை; எங்கும் எப்போதும் சௌரமாசமொன்றே உளது என்ற "தனி" எண்ணமா? இப்படியான அபத்தமான விதிகளை ஆக்குபவர்கள்தானு அறிவாளிகள்! இவர்கள்தானு உலகை உய்விக்கும் வழிகாட்டிகள்!" என்றெழுதப்பட்டிருக்கிறது.

இதனுல் இவர் தமது பஞ்சாங்கத்திற்கு மாருகப் பல வெளியீடுகள் உதயமாகிவிட்டனவே என்கிற மனக் கொதிப்பினுல் எழுதிவிட்டிருக்கிருரென்பது அறிவாளிகளுக்குத் தெரியாததொன்றல்ல. அதிலுள்ள "அபத்தம்" என்பது போன்ற ஆபாச வாக்கியங்களை அடுக்கு

மொழியினுல் அலங்கரிக்க எமக்கும் தெரியும். அது கூடாதென்பதே எமது குருநாதனின் திருவாக்கு. ஆகையினுல், அதில் உண்மைக்கு மாருனவைகளைக் காட்டி நிறுத்துவேன்.

அவர் புத்தகத்தின் முதற் பக்கத்தில் "சாந்திரமானிகள் கைக்கொள்ளும் ஸ்மிருதி புராணுதி நூல்களில் மாத்திரமன்றிச் சௌரமானிகள் கைக்கொள்ளும் ஆகமங்களிலுங் கூட விதிக்கப்பட்டிருக்கிறது" என்றெழுதுகிருர் இதனுல், சாந்திரமானிகள் யார்? சௌரமானிகள் யார்? என்பது புலப்படாவிட்டாலும் இவ்வருஷம் தை மாசத்தில் சிவராத்திரி கொள்ளவேண்டுமென்கிறவர்கள் சாந்திரமானிகளென்றும், மாசியில் கொள்ள வேண்டுமென்கிறவர்கள் சௌரமானிகள் என்றும் நினைக்க இடமிருக்கிறதோடு, திரு ஐயரவர்களுக்குச் சிவாகமங்கள் பிரமாணமாவதில்லை என்பது நிச்சயமாகிறது.

சில சிவாசாரியர்கள் சிவாகமப் பிரமாணத்துடன் மாசியிற் சிவராத்திரியென்று நிச்சயம் செய்ததைத் திருக்கேதீச்சர நிர்வாகி சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் வெளியிட்டதனுல், சிவாகமங்களைப் பிரமாணமாக அங்கீகரிக்காத ஐயரவர்களுக்கு என்ன குறைவு வந்துவிட்டது. சிவாலயங்களில் சிவாகமப் பிரமாணம் இல்லாதொழியட்டுமென்கிற நல்ல நினைவா?

சிவானந்த குருகுல இரண்டாவது வெளியீட்டின் முதற் பக்கம் இரண்டாவது பந்தியிலே "சைவர்களுக்குச் சௌர மாசம் சாந்திர மாசமிரண்டும் உடன்பாடேயாம். எந்தக் கர்மாவுக்கு எந்த மானம் சொல்லப்பட்டதோ எது அநுஷ்டானத்திலிருந்து வந்ததோ அந்த விதமே நடத்தவேண்டும்" என்றும், இரண்டாவது

பக்கம் இரண்டாவது பந்தியில் "நவராத்திரி கந்தசஷ்டி விரதங்கள் சந்தேகத்திற்கிடமின்றிச் சாந்திர மாதத்திலும்......... நடைபெற்றுவருதல் வேண்டுமென்பது ஆகம விதிகளால் நிச்சயமாகின்றது" என்பதைப் பார்த்திலரா?

இவ்வெளியீட்டு மூன்ருவது பக்கம், மூன்ருவது பந்தியில், இரகுநாதையர் சிவராத்திரி "தாரண (1944—1945) மாசி 29ந் திகதி மகாசிவராத்திரி, குரோதன (1925—26) மாசி 29ந் வெ மகாசிவராத்திரி, பராபவ மாசி 29 செ (1906 - 1907) மகா சிவராத்திரி சர்வஜித்து மாசி 29 சனி (1887—88) மகாசிவராத்திரி" என்றும் இந்த சோபகிருது வருஷம் மாத்திரம் யாது காரணத்தாலோ தைமாசத்தில் சிவராத்திரி விரதம் குறிக்கப்பெற்றிருக்கிறது" என்றும் காண்கின்றனவே. இம்மாறுதலுக்குக் காரணமென்ன?

ஐயரவர்கள் தமது நிர்ணயத்திலே, 6-வது பக்கத்தில் சித்தாகமத்தை ஒப்புக்கொண்டு வியாக்கியானத்தை "இதுதாளு வியாக்கியானஞ் செய்யும் முறை?" என்ருர். அதற்கு இவரே சரியான வியாக்கியானத்தை எழுதலாகாதா? ஐயரவர்கள் கருத்தை நாம் விளக்கிச் சமாதானம் எழுதுவது சந்தர்ப்ப வாதத்திற்கு ஏற்றதல்லவாதலாலும், அது மாருதி புச்சாபிவிருத்தியைப்போல நீண்டு போகுமாதலாலும் அஜவிருஷண நியாயமாக விலக்கப்பட்டது.

ஐயரவர்கள் (தாம் பிரமாணமாகக் கொள்ளாத) "சைவர்களுக்குப் பிரசித்தமான மிகப்பெரிய காமிகாகமத்திலே சிவராத்திரிவிரதம் மாககிருஷ்ண சதுர்த்தசியில் கொள்ளத்தக்கது" என்று விதித்து, "காரணுகமத்திலே சாந்திரமாதத்தை நீக்கவேண்டும் சௌரமாசத்

திலேயே சிவராத்திரியைச் செய்யவேண்டும் என்று கூறுவானேன்? காமிகாகமத்திலே இதனைச் சேர்த்து விளக்க இடம்போதாது போயிற்ரு? எனவினுவுகிருர் சிவபெருமானே.

சிவானந்தகுருகுல இரண்டாவது வெளியீட்டின் 14-வது பக்கத்திலும், மூன்ருவது வெளியீட்டின் 2-வது பக்கத்திலும், 1937-ம் ஆண்டில் கொக்குவில் சோதிடப் பிரகாசயந்திரசாலையிலே புத்தகமாக பதிப்பிக்கப்பெற்றதும், தமது சோதிடபரிபாலினியில் தொடர்பாக வெளிவந்துள்ளதுமாகிய தென்னிந்திய சைவசித்தாந்த சங்க விரதநிர்ணய விபரீதகண்டனத்திலும் மாகமென்பதும் மாசி என்பதும் ஒன்றே என்பதைக் கண்டு சிந்தித்து வேருக எழுதவழியில்லை என்பதைத் தெரிந்துமுள்ள நமது ஐயர் அவர்கள் "சாந்திரமாக மாசத்துக்குத்தான் தனிப்பெயர் என்னவோ?" என்று வருந்தி' 'சாந்திர மாசமென்றுதான் அழைக்கவேண்டுமா?' என்கிருர்கள். இருந்தால் எழுதலாம்; இல்லையானுல் எவர்தாம் என்னசெய்யலாம்.

"சித்திரை மேஷம்" "கார்த்திகை விருச்சிகம்" "மாசி கும்பம்" என்றிப்படியாக விருக்கிற பள்ளிப்பாலரின் பிரபவாதிநூல் பாடத்தையுமாவது கவனிக்கக்கூடாதா? இன்னும் கிராணேந்திரியத்துக்கு விஷயமாவது கந்தம். அது விரும்பத்தக்கதாயின் சுகந்தமென்றும், வெறுக்கத்தக்கதாயின் துர்க்கந்தமென்றும் சொல்லப்படுவதுபோல, மாகமென்பது மகா நஷத்திரம் பிரதானமானது; அது மாசி மாதமெனப்படும்; அதைச் சாந்திரமாசி சௌரமாசி என்பதில் இழுக்கென்னவோ?

மாகசப்தத்திற்கு அர்த்தம் ("மகாநஷத்திரயுக்தா பூர்ணிமா மாசீ ஸா அஸ்மின்னிதிமாக:") மகா நஷத்திரத்தோடுகூடிய பௌர்ணமி இதிலிருப்பதால் மாகமென்று பெயர் எனப்படுகிறது. இப்படியே பன்னிரண்டு

மாதங்களுக்குமாம். உணர்க. இந்த நிலையில் சோபகிருது வருஷம் தை மாதம் 15உ பௌர்ணிமையில் புனர்பூசமும் பூசமுமே சம்பந்தமுளது. மாசி மீ 15உ வியாழக்கிழமை பௌர்ணமியில் மகாநக்ஷத்திர சம்பந்த முளது. இதுவே மாகமென்பதில் இழுக்கென்ன? (இது வியாவஹாரிக பிரஸ்னையேயாகும்.)

இன்னும் ஸ்ரீமத் ஐயரவர்கள் நிர்ணயம் 5 வது பக்கத்தில் "மாசியில் ஒரு போதும் அதிகமாசம் வர மாட்டாதா? அல்லது சிவராத்திரிக்குமட்டும் அதிகமாச தோஷம் இல்லையென்று விதியிருக்கிறதா?" என்று வினவுகிருர். இன்னும் அதற்கடுத்தபந்தியில் "ஆகமங்களில் சௌரமாசங்களைச் சந்தேகத்திற் கிடமின்றிக் குறிக்கும் போது மேடமாதம் முதலிய இராசிப் பெயர்களாலேயே குறிக்கப்பட்டிருக்கின்றது." என்ருர்.

ஆகமங்களில் மகோற்சவங்களை சௌரமானப்படி தான் அநுஷ்டிக்கவேண்டுமென்கிற விதியுளது. அநுஷ்டானமுமதுவே. அப்படி ஆகமங்களில் சௌரமானப் படி செய்யவேண்டுமென்கிற உத்சவங்களை, சந்தேகத் திற் கிடமில்லாத மேஷாதி மாதங்களிலே என்றுதான் சொல்ல வேண்டு மென்பது பூர்வபக்ஷியாரின் வாதம். ஆனல் சிவாகமங்களிலே "சித்ராந்தம் சைத்ரமாசகே" என்பது போன்ற வாக்கியங்களே மிகவுண்டு. விசேஷ விதியாக (பக்ஷாந்தரம்) சிலநக்ஷத்திரங்களும் திதிகளும் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே, நமது ஐயரவர்களும் அவர்தம் முன்னேர்களும் இதுவரை மேற்கூறப்பட்ட பதங்களுக்கு சாந்திரமான மாசார்த்தம் செய்து எவ் வருஷத்திலேனும் பங்குனியில் சைத்ரோற்சவமும், (சித்திரை விழாவும்) இதுபோலவே மற்றையவைகளும் தங்கள் பஞ்சாங்கங்களில் போட்டதுண்டா? இனிப் போடுவார்களா? விளக்குக. இவர்கள் சிவமகோற் சவத்துக்கு அதிமாசதோஷம் கற்பித்ததுண்டா? சௌர

மாசவிதி கொண்டு உற்சவத்திற்கு அதிகமாசதோஷம் இல்லாதது போலவே சிவராத்திரிக்கும் அதிகமாச தோஷ மில்லை யென்பதே விடை.

நமது ஐயரவர்கள் தமது புத்தகத்தில் 9-வது பக்கத்திலிருந்து 12-வது பக்கம் வரை ஒருவழி காண்பித்தார்கள். அதுவும் மிகநன்றே! அதாவது மதுரை ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் மூலம் ஆவியுலகத்தவரோடு தொடர்புற்று அப்புண்ணியப்பகுதியிலுள்ள ஆவிகள் மூலம் விசாரித்து நடத்த "ஷெ குருமகா சந்நிதானம் அவர்களின் உதவியை நாடுவோமாக" எனமங்களம் பாடிமுடித்தனர். அதுவும் ஒரு நல்லவழியே!

சுதேசமித்திரனில், சென்னை 1964 ம் வருஷம் பிப்ரவரி மாதம் 10 உ மதுரை ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம் அவர்கள் ஆஞ்ஞைப்படி வெளியிடப்பட்ட மகாசிவராத்திரி தினமும் சோபகிருது வருஷம் மாசிமாதம் 29-ம் திகதி வியாழக்கிழமையே என்கிற மங்களத்தைப் பாடி முடிக்கிறேன்.

மங்களம்! மங்களம்!

கலைவாணி அச்சகம், 10, பிரதான வீதி, யாழ்ப்பாணம் 57—64